முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 19.02.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 50/2024**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அம்சா | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | ஜெயராமன் | வயது | : | 65 |
| ஊர் | : | தேவனாத்தூர் | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 1 (அம்சா): வாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணை:**

1. நான் தற்போது என்ன பயிர் வைத்துள்ளேன் என்றால் தற்போது எந்த பயிரும் வைக்கவில்லை. நாற்று மட்டும் வைத்துள்ளேன். பிரதிவாதிகள் என்ன பயிர் வைத்துள்ளார்கள் என்றால் சவுக்கு மற்றும் நெல்பயிர் வைத்துள்ளார்கள். நான் தண்ணீர் இல்லாததால்தான் பயிர் வைக்கவில்லை என்றால் சரிதான். நான் என் கிராமத்திலிருந்து என்னுடைய நிலத்திற்கு செல்வதற்கு எவ்வளவு அடி பாதை இருக்கும் என்றால் சுமார் 30, 40 அடி பாதை இருக்கும். பாதைக்கு இடது பக்கமும், வலது பக்கமும் சுமார் 10, 15 பேர் பயிர் வைத்திருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரவி மணிகண்டன், பிரியா, மணிவண்ணன், கிளியம்மாள், சம்பத் ஆகியோர் என்னுடையக நிலத்தில் மண்ணை கொட்டி வழியை மறித்தும் பைப்பினை உடைத்ததால் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன்.

2. பிரதிவாதிகள் என்னுடைய நிலத்தை தாண்டிதான் அவர்கள் நிலத்திற்கு செல்லவேண்டும் என்று சொன்னால் சரிதான். அவர்கள் என் நிலத்தை தாண்டிதான் செல்லவேண்டும் என்றும் ஆனால் அவர்கள் என்னுடைய வழியை மறித்தார்கள் என்று நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கில் நான் குறிப்பிட்டிருக்கும் ஏ,பி அயிட்ட சொத்துக்கள் என்ன என்று தெரியாது என்று சொன்னால' சரிதான். என் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. ஜக்பந்திகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பிரதிவாதிகள் அவர்களின் நிலத்தில் கோவிலும் சவுக்கு, தேக்கு, நெல்பயிர் ஆகியவற்றைதான் வைத்துள்ளார்கள் என்றும் வீட்டு மனைகள் எதுவும் அமைக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நானும் என் தந்தையும் அரசு புறம்போக்கு நிலத்தை அனுபவித்தோம் என்று குறிப்பிட்டதற்கான ஆதாரம் ஏதேனும் வழக்கில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என் தம்பிக்குத்தான் தெரியும்.

3. என்னிடம் காண்பிக்கப்படும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைநாட்டு என்னுடையதுதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. வழக்கு விவரம் அனைத்தும் எனக்கு தெரியாது. என் தம்பிக்குத்தான் தெரியும். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி காவல் நிலையத்தில் வழக்கு சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் என்றும் அதில் நானோ அல்லது பிரதிவாதிகளோ அல்லது யாரும் உரிமை கேட்க முடியாது என்று சொல்லி அனுப்பினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் புகார் கொடுத்த பிறகு எதுவும் வந்து பார்க்கவில்லை. மேற்படி காவல் துறையினர் வழிப்பாதையை யாரும் மறிக்கக்கூடாது என்று அறிவுறுத்தினர் என்று சொன்னால் சரிதான். நாங்கள் பணம் கட்டி நிலத்தினை அளப்பதற்கு மனு கொடுத்தோமா என்றால் இல்லை. பொதுவாக நிலத்தினை அளந்தால்தான் என்னுடைய நிலம் எவ்வளவு என்றும் பிரதிவாதிகள் நிலம் எவ்வளவு நிலம் என்றும் அரசு புறம்போக்கு எவ்வளவு என்று தெரியவரும் என்று சொன்னால் சரிதான்.

4. நான் என் நிலத்தினை அளந்து பார்க்காமலேயே பிரதிவாதிகள் என் நிலத்தில் மணல் கொட்டினர் என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சாலை ஓரத்தில் இல்லாத நிலங்களுக்கு செல்வதற்கு வரப்பின் மேலேதான் எடுத்து செல்வதும் டிராக்டர் ஓட்டுவதும் வழக்கம் என்று சொன்னால் சரிதான். என் தம்பிதான் பெருமாள் என்று சொன்னால் சரிதான். என் தம்பி என்னுடன் காவல் நிலையத்திற்கு வந்தார் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்தேனா அல்லது என் தம்பி புகார் கொடுத்தாரா என்றால் நான்தான் புகார் கொடுத்தேன். நான் அரசாங்க சொத்தான வழிப்பாதையை ஆக்கிரமித்து பயிர் வைத்து வருகிறேன் எ ன்று சொன்னால் சரியல்ல. பூங்காவனம், குப்பன் மற்றும் விஜயன் ஆகியோர் என்னுடைய நிலத்தில் பக்கத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் அவர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரிதான்.

5. நான் சர்வேயர் வைத்து நிலத்தினை அளக்காமல் ஆக்கிரமித்துள்ளதாக பொய் சொல்லி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் நான் பயிர் வைப்பதை என்னாலும் தடுத்தது இல்லை என்று சொன்னால் சரிதான். அவர்கள் பைப்பினை உடைத்ததால்தான், வழிப்பாதையை மறித்ததால்தான் பிரச்சனை. மனு சொத்தான பி செட்யுல் சொத்தானது அரசாங்க சொத்து என்பதால் தடையுத்தரவு பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்குமூலம் இல்லை என்பதால் வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது.)**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கைநாட்டு வைத்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.19 17:25:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு